செ.வெ எண்:31/2020 நாள்: 17.03.2020

# சேலம் மாவட்டத்தில் மக்கள் அதிகம் கூடும் இடங்களாக கருதப்படும் திரையரங்குகள், வணிக வளாகங்கள், சுற்றுலாத் தளங்கள் உள்ளிட்ட அனைத்தும் வருகின்ற 31.03.2020 வரை முழுமையாக மூடிட உத்தரவிடப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் அதிகம் கூடுவதை முற்றிலும் தவிர்ப்பதோடு கை கழுவும் முறையை முழுமையாக பின்பற்றி கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சேலம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து அரசுத் துறை அலுவலர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு இந்நோய் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்திட அறிவுருத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் தனியார் மற்றும் அரசுப் பேருந்துகள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், பொதுக் கழிவறைகள் போன்ற இடங்களில் பொது சுகாதாரத் துறையினர், போக்குவரத்துத் துறையினர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து தினந்தோறும் கிருமிநாசினி மூலம் தூய்மைப்படுத்திடவும், கூடுதல் சுகாதார நடவடிக்கைகளையும், கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளையும் தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிகளை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சுகாதாரத் துறை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். ஒருங்கிணைந்த குளிர்சாதனை வசதி (Centralised Air Conditioning) உள்ள இடங்களில் அவற்றை (Vent, Duct) ஆகியவற்றை வாரம் ஒருமுறையாவது கிருமிநாசினி கொண்டு முழுமையாக சுத்தம் செய்ய வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் செயல்படும் அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி மையங்கள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களையும் வருகின்ற 31.3.2020 வரை மூடிட உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசுபெறும் மற்றும் தனியார் பள்ளிகள் என 2,453 பள்ளிகளும், 81 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகளும் மற்றும் அனைத்து பொறியியல் கல்லூரிகளும் இன்று (17.03.2020) முதல் மூடப்பட்டுள்ளன. இவற்றில் அரசுத் தேர்வுகள் நடைபெறவுள்ள சுமார் 135 பள்ளிகள் தேர்வுகள் நடைபெறும்போது மட்டும் இயங்கும். இதன்படி 10–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை மற்றும் கல்லூரித் தேர்வுகள் – செய்முறைத் தேர்வுகள் (Practical) மற்றும் நுழைவுத் தேர்வுகள் திட்டமிட்டபடி நடைபெறும். மேலும், **மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிகள் தொடர்ந்து இயங்கும்.** இத்தேர்வுகள் முடிவடையும் வரை தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்களுக்காக மட்டும் விடுதிகள் மற்றும் உறைவிடப் பள்ளிகள் தொடர்ந்து இயக்குவதோடு அம்மாணவ, மாணவியர்களுக்கு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அந்தந்த பள்ளி, கல்லூரி, விடுதி நிருவாகத்தினரே முழுமையாக மேற்கொள்ள வேண்டும்.

அங்கன்வாடி மையங்கள் அனைத்தும் வருகின்ற 31.3.2020 வரை மூடப்பட வேண்டும் என்ற உத்தரவிற்கிணங்க சேலம் மாவட்டத்தில் உள்ள 2,696 அங்கன்வாடி மையங்களும் மூடப்பட்டுள்ளன. இம்மையங்களில் உணவருந்தும் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கான

உணவுப் பொருட்களை (Dry Ration) அந்தந்த குடும்பத்திடம் அங்கன்வாடி மைய அமைப்பாளர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் உள்ள 54 திரையரங்குகள், மக்கள் அதிகம் கூடும் 4 வணிக வளாகங்கள் (Shopping Malls), 17 கேளிக்கை அரங்கங்கள் (Amusement Parks), 7 நீச்சல் குளங்கள் (Swimming Pools), உடற்பயிற்சி மையங்கள் (Gymnasiums), குரும்பப்பட்டி வன உயிரியல் பூங்கா, ஏற்காடு சூழல் பூங்கா, ஆனைவாரி முட்டல் நீர்வீழ்ச்சி மற்றும் பூங்கா, மேட்டூர் அணை பூங்கா மற்றும் 1 அருங்காட்சியகம் (Museums) உள்ளிட்டவைகளும் வருகின்ற 31.3.2020 வரை மூடப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் உள்ள திருமண மண்டபங்களில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் தவிர வேறு எந்த நிகழ்ச்சிகளும் நடத்தக்கூடாது என்றும், அவ்வாறு திட்டமிடப்பட்ட நிகழ்வுகளில் கூட குறைந்த அளவில் மக்கள் பங்கேற்க வேண்டுமெனவும், ஏற்கனவே திட்டமிடப்பட்டது போக, புதிய நிகழ்ச்சிகள் எதுவும் வருகின்ற 31.3.2020 வரை நடைபெறுவதை திருமண மண்டபங்களின் உரிமையாளர்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டுமெனவும் அறிவுருத்தப்பட்டுள்ளது. திருவிழாக்கள், துக்க நிகழ்வுகள் உட்பட அனைத்து சமூக நிகழ்வுகளிலும், குறைந்த அளவில் மக்கள் கூடினால், கொரோனா வைரஸ் பரவுதல் பெரிய அளவில் தடுக்கப்படும் என சுகாதார வல்லுநர்கள் அறிவுறுத்தி உள்ளார்கள். பொது மக்கள் இதனை முழுமையாக கடைபிடிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் அதிகமாக மக்கள் கூடும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், கோடைக் கால பயிற்சி வகுப்புகள், முகாம்கள், மாநாடுகள், கருத்தரங்குகள், வணிகக் கண்காட்சிகள், கலாச்சார நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகளை வருகின்ற 31.3.2020 வரை நடத்திட அனுமதி வழங்க வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. அனைத்து விளையாட்டு அரங்குகள், கிளப்புகள், பார்கள் (டாஸ்மாக் பார்கள் உட்பட) கேளிக்கை விடுதிகள் (Clubs) போன்றவைகளும் வருகின்ற 31.3.2020 வரை மூடப்பட வேண்டும்.

அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில், முழுமையாக கை கழுவுவதைப் பற்றியும், தடுப்பு நடவடிக்கைகள் பற்றியும், அங்கு பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அந்தந்த நிறுவனங்கள் இதற்குத் தேவையான சோப், கிருமிநாசினி, முகக்கவசம் ஆகியவற்றை போதிய அளவில் இருப்பில் வைத்து, பணிபுரியும் அனைவருக்கும் வழங்க வேண்டும்.

கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் குடும்பத்துடன் வெளியில் சுற்றுலா செல்வதை தவிர்க்க வேண்டும். மேலும், சுற்றுலாவை ஒருங்கிணைக்கும் தனியார் மற்றும் அரசு சுற்றுலா ஒருங்கிணைப்பாளர்கள் வருகின்ற 31.3.2020 வரை புதிய சுற்றுலா எதையும் ஒருங்கிணைத்து, பொது மக்களை சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லக் கூடாது. சுற்றுலா பயணியர் தங்குமிடம் (Tourist Resorts) அனைத்தும் வருகின்ற 31.3.2020 வரை மூடப்படுவதோடு, சுற்றுலா பயணியர் தங்குமிட உரிமையாளர்கள் வருகின்ற 31.3.2020 வரை எவ்வித முன்பதிவும் (Advance Booking) செய்யக் கூடாது.

கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களில் கூட்டம் கூடுவதை பொது மக்கள் தவிர்க்குமாறும், இவ்விடங்களில் நோய்த் தடுப்புக்கான போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இந்து சமய அறநிலையத் துறை, சுகாதாரத் துறை, மசூதிகள் மற்றும் தேவாலயங்களின் நிர்வாகங்கள் முழுமையாக மேற்கொள்வதோடு, தெர்மல் ஸ்கேனர் முறையில் பரிசோதித்து, எவருக்கேனும் நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுப்பதோடு அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு உடன் தகவல் தெரிவித்திட வேண்டும்.

யாரேனும் கொரோனா வைரஸ் காய்ச்சல் பற்றி பொய்யான செய்தியோ, வதந்தியோ அல்லது தேவையற்ற பீதியை செய்தியாகவோ, சமூக வலைதளத்திலோ அல்லது வேறு எந்த வடிவிலோ பரப்பினால், இந்திய தண்டனைச் சட்டம், பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 மற்றும் நடைமுறையில் உள்ள பிற சட்டங்களின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொதுமக்கள் மற்ற மாநிலங்களுக்கு பயணிப்பதையும், பொது இடங்களில் அதிக அளவில் மக்கள் கூடுவதையும் அடுத்த 15 நாட்களுக்குத் தவிர்க்க வேண்டுமெனவும், கூட்டம் நிறைந்த பொது இடங்களுக்கு வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த நபர்கள் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டுமெனவும், மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு குறிப்பாக, வழிபாட்டுத் தலங்கள், வணிக மையங்கள் (Markets), திருமணங்கள் மற்றும் இதர சமூக விழாக்கள், விருந்துகள் ஆகியவற்றை தவிர்க்குமாறும், தனி மனித சுகாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொது மக்கள் அனைவரும் தனிநபர் சுகாதாரத்தினை பேணவும், குறிப்பாக வீட்டிற்குள் நுழையும் போதும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்யவும், கைகளை சுத்தம் செய்யாமல் முகத்தைத் தொட வேண்டாம் எனவும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் விடுமுறை நாட்களின்போது குழுவாக விளையாடாதவாறு கண்காணிக்கவும், வீட்டிற்குள் நுழைந்தவுடனும், அவ்வப்போதும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவதை உறுதி செய்திட வேண்டும். அனைத்து அரசு அலுவலகங்கள் வழக்கம் போல் இயங்கும். அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களுக்கு செல்பவர்கள் பாதுகாப்பு கருதி, தங்கள் கைகளை உரிய கிருமிநாசினியைக் கொண்டு தூய்மைபடுத்திக் கொண்ட பின் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா வைரஸ் சம்பந்தமாக தெரிந்து கொள்ள சென்னை சுகாதாரத் துறையின் 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை எண்கள் 104, 044–29510400, 044–29510500, 94443 40496 மற்றும் 87544 48477. சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறையின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1077, சேலம் மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 0427 – 2450023 மற்றும் 0427 – 2450498 ஆகியவற்றினை தொடர்பு கொள்ளலாம்.

கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் மத்திய மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதாரத் துறையின் வழிகாட்டு நெறிமுறைகளையும், தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள அறிவுரைகளையும் அனைத்து அரசுத் துறைகளும், பொது நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் தவறாது கடைபிடிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எனவே, சேலம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோயை தடுப்பதற்கான முயற்சிகளை ஒவ்வொரு தனி மனிதனும் சுயமாக உணர்ந்து, முழுமையாக மேற்கொண்டு, தமிழ்நாடு அரசு மற்றும் சேலம் மாவட்ட நிர்வாகம் எடுத்து வரும் நோய் தடுப்பு, பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டுமெனவும், பொதுமக்கள் அதிகம் கூடுவதை முற்றிலும் தவிர்ப்பதோடு கை கழுவும் முறையை முழுமையாக பின்பற்றி கைகளை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒம்/–திரு.சி.அ. ராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
சேலம் மாவட்டம்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்.